மையில் காசாங்காடு கிராமத்திலே 4-வது கிலோ மீட்டரில் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. இவையன்றி பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கத்தினுடைய நிதி நிலைக்கேற்ப தேவையை அடிப்படையாகக் கொண்டுதான் கால்நடை மருந்தகம் அமைக்க இயலுமே தவிர எங்கெல்லாம் நாம் விரும்புகிறோமோ அங்கெல்லாம் அவற்றை அமைக்கிற சூழ்நிலை ஏற்பட்டால் உண்மையான தேவையை நாம் பூர்த்தி செய்ய இயலாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே வரும் காலங்களில் இது போன்ற நாட்டுச்சாலை கிராமத்தில் கால்நடை மருந்தகம் உண்மையிலேயே தேவை ஏற்படுமானால் அந்த நேரத்தில் அது குறித்து பரிசீலனை செய்வோம் என்ற பதிலை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

10-20 மணி

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

அவையில் செயல்படும் ஒரு கட்சி குறித்து.

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of order கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற தமிழ்நாடு ஜனதா கட்சிக்கும் ஜனதா . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே 'Point of order' வராது.

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உட்காருங்கள். நீங்கள் பேசும்போது பேசலாம்.